செ.கு.எண்: 177 நாள்: 15-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 15.5.2012

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள **ஆழியார் அணையின்** பாசன பகுதிகளுக்கு முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்ட வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டத் தொகுப்பிலுள்ள ஆழியார் அணையிலிருந்து 16.5.2012** முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள **6,400 ஏக்கர் நிலங்கள்** பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.